# வலிகாமம் தெற்கு பிரதேச சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 டிசம்பர் 19 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

i. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் வருமானம் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | பொறுப்புகள் | | வருமானங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | | | 02 | 25இ442இ497 | 01 | 158இ433 |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 3இ242இ600 | | | | |
| விடுபாடுகள் | | - | 01 | 4இ284இ160 | | |

ii. சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த 9 மோட்டடார் வாகனங்களும் வண்டிகளினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப் படாமையால் மோட்டார் வாகனங்களும் வண்டிகளினதும் பெறுமதி குறைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை
------------------------------------------------------

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை
--------------------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 130இ358இ072 பெறுமதியுடைய 05 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.3. இணக்கமின்மைகள்
-----------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| <u>சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு</u> | <u>விபரம்</u> |
|---|---|
| <u>1988ம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி</u> | |
| அத்தியாயம் ஐஐஐ பிரிவு 33 | வீதவரி நிலுவை ரூபா 4,665,556 தொடர்பில் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் வரி மதிப்பீட்டு எழுதுநரால் வரி இறுக்கத் தவறுனர் பட்டியலொன்று தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் ஐஐஐ பிரிவு 76 | வாடகைகள் குத்தகைகள் நிலுவைகள் ரூபா 2இ257இ559 தொடர்பில் அறவீட்டு தாமதம் பற்றி அரசிறை எழுதுனரினால் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| விதவை அநாதை ஓய்வூதிய கொடுப்பனவு | 2006ம் ஆண்டின் இறுதி 6 மாதங்களில் அலுவலர்களிடம் அறவிடப்பட்ட விதவை அனாதை ஓய்வூதிய பங்களிப்பு ரூபா 222இ405 விதவை அனாதை ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பப் படாது சில்லறைக் கடனாளிகள் கணக்கில் காட்டப் பட்டுள்ளது. |
| நிதி ஒழுங்கு விதி 571 | 1997-2010 வரையான நானாவித வைப்புக்கள் ரூபா 722இ633 நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் மீதியாக நானாவித வைப்புக்களில் உள்ளடக் கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 38இ465 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகை ரூபா 119இ141 விளைந்திருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 12இ410இ589 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 15இ939இ641 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

----------------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ை.இறைகளும் வரிகளும் | 1இ674 | 1இ036 | 5இ924 |
| ைை.குத்தகை வாடகைகள் | 27இ182 | 27இ225 | 440 |
| ைைை.அனுமதிப்பத்திரக்கட்டணங்கள் | 3இ207 | 7இ395 | - |
| ை.வேறு வருமானங்கள் | 61இ542 | 70இ358 | 34இ594 |

2.3.2 வருமான முகாமைத்துவம்

-------------------------------------------

மீளாய்வாண்டிலும் முன்னைய காலங்களிலும் அறவிட வேண்டிய ரூபா 84,857,033 பெறுமதியான வீதவரி வாடகைகள் குத்தகை மற்றும் உரிமக் கட்டணங்கள் அறவிடுவதற்கு ஆக்கபூர்வமானதும் சட்டரீதியானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 நீதிமன்றக் தண்டப்பணம்

----------------------------------------

மீளாய்வாண்டில் ஓகஸ்ட் - டிசம்பர் வரையான காலப்பகுதிக்கு வருமதியான நீதிமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் ரூபா 1,001,954 வருமானமாகவோ வருமதியாகவோ கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

2.3.4 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

---

i. 2006 – 2012 ம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் ரூபா 65இ694இ174 வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதிவரையும் அறவிடப் பட்டிருக்கவில்லை.

ii. மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய முத்திரைத்தீர்வைக் கட்டணங்கள் ரூபா 21,330,310 வருமானமாகவோ வருமதியாகவோ கணக்கிடப் பட்டிருக்கவில்லை.

2.4 பயன்பாடற்ற ஒதுக்கங்கள்

---

கடன்களை மீட்டல் ஒதுக்கமாக கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 645இ771 பெறுமதியான ஒதுக்கங்கள் பயன்படுத்தப்படாத ஒதுக்கமாக அவதானிக்கப் பட்டுள்ளது.

2.5 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை

---

2001 – 2012ம் ஆண்டு காலப்பகுதியில் மருதனாமடம் சந்தை மற்றும் நீர்தாங்கி பொருத்தும் வேலைகளுக்காக அரச அதிபர் மற்றும் பிராந்திய உள்;ராட்சி உதவி ஆணையாளரினால் வழங்கப்பட்ட நன்கொடைகள் ரூபா 243,873 பயன்பாடின்றி நானாவித வைப்புக் கணக்கில் காணப்படுகின்றது.

2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

---

i. தலைமை அலுவலக மற்றும் உப அலுவலக கணிப்பீட்டுசபை அறிக்கைகளை இருப்பு பதிவேட்டுடன் ஒப்பீடு செய்தபோது 42 எண்ணிக்கையான பொருட்கள் மேலதிகமாகவும் 43 எண்ணிக்கையான பொருட்கள் பற்றாக்குறையாகவும் காணப்படுகின்றது.

ii. இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாது பின்வரும் பொருள்கள் கணிப்பீட்டு சபை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| <u>பொருள் வகை</u> | எண்ணிக்கை |
|---|---|
| 2000 லீற்றர் நீர் தாங்கி | 02 |
| பிளாஸ்ரிக் கதிரை | 26 |

2.7 ஒப்பந்த நிர்வாகம்

----------------------------

நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

-----------------------------------------------------------

மீளாய்வாண்டில் ரூபா 37இ673இ233 பெறுமதியான 9 மூலதன வேலைத்திட்டங்கள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்படாது சில்லறைக் கடனாளிகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் மக்களுக்கு கிடைக்க வேண்டிய சேவைகள் பெறப்பட முடியாதுள்ளது.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வருமான சேகரிப்பு
ii. நிலையான சொத்துக்கள்
iii. கணக்கீடு
iv. ஆளணி
v. நன்கொடை
vi. நானாவித வைப்புக்கள்